பிளாக் தண்டர் ரிசார்ட்டிற்கு
இந்திய விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா - சிறந்த செயல்திறன் விருது

ஆசியாவின் நெ.1 வாட்டர் தீம் பார்க் என்று புகழ்பெற்றுள்ள பிளாக் தண்டர் நீலகிரி மலை அடிவாரத்தில் இயற்கை எழில் சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளது. கோவையில் இருந்து 40 கிலோமீட்டர் தூரத்தில் ஊட்டி மெயின் ரோட்டில் 60 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பிளாக் தண்டர் தீம் பார்க்கில் அனைத்து வயதுப் பிரிவினரையும் கவரும் வகையில் பரவசமுட்டும ஏராளமான விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் உள்ளன.

குடும்பத்துடன் விளையாடி மகிழ்ந்து பொழுதுபோக்க வரும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு முழுமையான, உலகத்தரமான அனுபவத்தை அளித்திட பிளாக் தண்டர் உறுதி பூண்டுள்ளது. வார இறுதி நாட்களில் மற்றும் விடுமுறைக் காலங்களில் ஏராளமானோர் பிளாக் தண்டர் தீம்பார்க்கிற்கு வருகை தருகின்றனர். அவர்களை மகிழ்விக்க பிளாக் தண்டரில் பல பொழுதுபோக்கு அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை அனைத்தும் பொது மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுள்ளது.

கடல் அலை போல் காட்சி தரும் வேவ் பூல், வைல்ட் ரிவர் ரைட் என்ற காட்டாறு பயணம், டோரா டோரா, ஃபெரிஸ் வீல், கொலம்பஸ், டிராகன், ரோலக் கோஸ்டர், குழந்தைகளை மகிழ்விக்கும் டாய் டிரெயின் மற்றும் கேட்டர் பில்லர் ரைடு, சர்ஃப் ஹில், லேஸி ரிவர் ரைடு, கிட்டீஸ் பூல், ஷாட் கன் ஸ்லைட், கேனன் பால் ரைட், ஜெயண்ட் வீல், கேபிள் கார் முதலான அம்சங்கள் பிளாக் தண்டரில் வாடிக்கையாளர்களைப் பரவசப்படுத்தி வருகின்றன.

வரவேற்கும் வசதிகள்

பிளாக் தண்டரில் வாடிக்கையாளர்கள் தங்கி ஓய்வெடுக்க அனைத்து வசதிகளுடன் கூடிய ரிஸார்ட் வசதியும் உள்ளது. தென்னை, பாக்கு தோப்பு சூழ்ந்த இயற்கை அழகு கொஞ்சும் அமைதியான இடத்தில் 40 டீலக்ஸ் அறைகளுடன் இந்த ரிஸார்ட் அமைந்துள்ளது. அனைத்து அறைகளிலும் பாத்டப், கேபிள் டிவி, டைரக்ட் டெலிபோன் வசதி முதலான வசதிகள் இடம்பெற்றுள்ளன.

மேலும் தண்டர் கபே என்ற பல்சுவை உணவகம், டஸ்கர் பார், பாம்பூ குரூவ் என்ற பெயரில் மீட்டிங்குகள், தீம் பார்ட்டிகள் நடத்த வசதியாக இரு கான்பரன்ஸ் ஹால்கள் மற்றும் இயற்கையான முறையில் உடல் நலத்தைப் பராமரிக்க உதவும் கேரள ஆயுர்வேத மஸாஜ் ஆகியவையும் கூடுதல் சிறப்புகளாக இடம்பெற்றுள்ளன.

இது தவிர, வாடிக்கையாளர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் வசதிக்காக மருத்துவ முதலுதவி, காணாமல் போனவர்களை, தவறவிட்ட பொருட்களை கண்டுபிடிக்க உதவும் சிறப்பு கவுண்ட்டர்கள், உடை மாற்றும் அறைகள், பொருட்களைப் பாதுகாக்கும் லாக்கர்கள் முதலான வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. மேலும் வாகனங்கள் நிறுத்த 12 ஏக்கர் பரப்பளவில் இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பில் தனிக்கவனம்

பிளாக் தண்டர் தீம்பார்க்கில் உள்ள ஒவ்வொரு விளையாட்டும் உரிய பாதுகாப்பு விதிமுறைகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. வருகை தரும் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியான அனுபவத்துடன் முழுமையான பாதுகாப்பையும் பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு விளையாட்டுக்கும் கைடுகள் மற்றும் பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வாட்டர் தீம் பார்க்கில் பயன்படுத்தப்படும் தண்ணீர் சர்வதேச தரத்திற்கு இணையாக இருப்பதை உறுதிப்படுத்த பயிற்சிபெற்ற கெமிஸ்ட்டுகள் மற்றும் என்ஜினியர்கள் அடங்கிய குழு ஒன்று விழிப்புடன் செயல்படுகிறது.

சிறந்த செயல்திறன் விருது

இந்திய பொருளாதாரம் மற்றும் ஆராய்ச்சிக் கழகம் கடந்த மே மாதம் 6-ம் தேதி பிளாக் தண்டர் ரிசார்ட்டிற்கு இந்திய விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா பிரிவில் சிறப்பான செயல்திறனுக்கான விருதை அளித்தது. இந்த விருதை செயல் இயக்குனர் திரு ஏ. ஜோசப் வின்செண்ட் பெற்றுக்கொண்டார்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்தவிருது மேலும் சிறப்பாக செயல்பட ஊக்கமளிப்பதாய் உள்ளது என்று பத்திரிகையாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பிளாக் தண்டர் தீம் பார்க் நிறுவனத்தின் செயல் இயக்குனர் திரு ஏ.ஜோசப் வின்செண்ட் அவர்கள் தெரிவித்தார்.